# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 9

**கத்தோலிக்கதிருமறை**

பகுதி I

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. பழைய ஏற்பாட்டில் உள்ள 46 நூல்களும் எத்தனை வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.
1. இரண்டு 2. மூன்று 3. நான்கு 4. ஐந்து

2. இறைவாக்கினர் நூல்களில் ஒன்று
1. எசாயா 2. யோபு 3. யோசுவா 4. தோபித்து

3. திருச்சபையின் ஆரம்பம்,வளர்ச்சி பற்றி எடுத்துக் காட்டும் நூல்
1. புனிதமத்தேயு நற்செய்தி 2. புனிதமாற்கு நற்செய்தி
3. திருத்தூதர் பணிகள் 4. புனிதலூக்கா நற்செய்தி

4. சீயோன் என அழைக்கப்படும் இடம்
1.எருசலேம் 2. சீனாய் மலை 3. யூதேயா 4. பெத்லேகேம்

5. புதிய ஏற்பாட்டில் இடம்பெறும் வெளிப்பாட்டு இலக்கியம்
1. தானியேல் 2. திருத்தூதர் பணிகள்
3. திருவெளிப்பாடு 4. திருமுகங்கள்

6. திருப்பாடல்கள் எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
1. மூன்று 2. நான்கு 3. ஐந்து 4. ஆறு

7. "மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன்" இது எத்தனையாவது திருப்படலைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.
1. 102 2. 120 3. 122 4.121

8. யூதர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா இயேசு தான் என்பதை எடுத்துக்காட்டும் நோக்கத்தோடு எழுதப்பட்ட நற்செய்தி
1. புனிதமத்தேயு நற்செய்தி 2.புனிதமாற்கு நற்செய்தி
3. புனிதலூக்கா நற்செய்தி 4. புனிதயோவான் நற்செய்தி

9. 'செபத்தைப் பற்றிய ஒரு புதையல்' எனக்குறிப்பிடப்படுவது
1. நீதிமொழிகள் 2. திருப்பாடல்
3. இனிமைமிகுபாடல் 4. சீராக்கின் ஞானம்

10. 'அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்' இதில் அவள் வித்து என்பது
1. சாத்தான் 2. இயேசுக்கிறிஸ்து
3. மரியாள் 4. மக்கள்

Education கல்வி

11. இறைவன் நோவாவிடம் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக அமைவது

1. வானவில் 2. பேழை 3. புறா 4. வெள்ளப்பெருக்கு

12. இஸ்ரேல் மக்களிடையே நீதித்தலைவர்கள் வாழ்ந்த காலமாக அமைவது

1.கி.மு 1200 – கி.மு1050 2. கி.பி. 1200 – கி.பி. 1220

3. கி.மு 1200 –கி.மு 100 4. கி.பி 100 - கி.பி 300

- கடைசி நீதித்தலைவர்
- முதலாவது இறைவாக்கினர்
- சவுல்,தாவீது இவர்களை அரசனாக திருப்பொழிவு செய்தவர்

13. இக்கூற்றுக்குப் பொருத்தமானவர்

1. தெபோரா 2. சாமுவேல் 3. கிதியோன் 4. சிம்சோன்

14. 'நானே' என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ள நற்செய்தி

1. புனிதலூக்கா நற்செய்தி 2. புனிதமாற்கு நற்செய்தி

3. புனிதமத்தேயு நற்செய்தி 4. புனிதயோவான் நற்செய்தி

15. இஸ்ரேயேல் வரலாற்றில் முதல் அரசன்

1. தாவீது 2. சாலமோன் 3. சாமுவேல் 4. சவுல்

16. தாவீது மன்னனின் தவறைச் சுட்டிக்காட்டிய இறைவாக்கினர்

1. ஆமோஸ் 2. யோவேல் 3. எலியா 4. நாத்தான்

17. திருமுழுக்கின் போது எம்மில் இருந்து நீக்கப்படும் பாவம்

1. சென்மபாவம் 2. கன்மபாவம் 3. சாவானபாவம் 4. அற்பபாவம்

18. இஸ்ரயேலின் பெண் நீதித் தலைவி

1. ஜெப்தா 2. தெபோரா 3. ரூத் 4. எஸ்தர்

19. தலையாய பாவங்கள் ------------------------------ வகைப்படும்

1. ஐந்து 2. எட்டு 3. ஏழு 4. ஆறு

20. நித்தியதண்டனையிலிருந்து விடுதலை பெற செய்ய வேண்டியது

1. பாவமன்னிப்புப் பெறல் 2. திருமுழுக்குப் பெறல்

3. நோயிற் பூசுதல் பெறல் 4. தானதர்மம் செய்தல்

## பகுதி II

**எவையேனும் ஐந்துவினாக்களுக்குவிடைதருக**

01.

i.புதியஏற்பாட்டு நூல்களின் மூன்றுவகைகளையும் தருக

ii.ஞானநூல்கள் நான்குதருக

iii. பழையஏற்பட்டு நூல்களின் ஐந்துவகைகளையும் தருக

(3+4+5=12)

02.

i. ஒத்தமைநற்செய்திகள் எவை?

ii. இயேசுதமது இறைத் தன்மையை வெளிப்படுத்தும் 'நானே' என்ற கூற்றுக்கள் நான்கு எழுதுக

iii.'நல்ல ஆயன் நானே' என்ற இயேவின் கூற்றை உமது அனுபவத்தோடு இணைத்து ஐந்து வசனங்கள் எழுதுக.

(3+4+5=12)

03.

i. நோவாவின் புதல்வர்களின் பெயர்களைத் தருக

ii.பாவத்தில் விழுந்த மனிதனுக்கு இறைவன் கொடுத்த தண்டனையும்,விளைவும் எவை?

iii. இன்று சமுதாயத்தில் காணப்படுகின்ற பாவச் செயல்களை ஒழிப்பதற்கு மாணவராகிய நீர் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் ஐந்து தருக.

(3+4+5=12)

04.

i. இஸ்ரேல் நீதித்தலைவர்களில் மூவரைக் குறிப்பிடுக

ii.சாமுவேல் எனும் நீதித்தலைவர் பற்றி நீர் அறிந்த விடயங்களில் நான்கினைத் தருக.

iii.நீதித்தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள் ஐந்து தருக.

(3+4+5=12)

05.

i.சாவானபாவத்துக்குரிய காரணங்கள் மூன்று தருக

ii.விண்ணை நோக்கி கூக்குரல் இடும் பாவங்கள் நான்கு தருக.

iii.தூய ஆவியாருக்கு எதிரான பாவங்கள் ஐந்து தருக.

(3+4+5=12)

06.

i. இஸ்ரயேல் மக்களிடையே இறைவன் ஏற்படுத்திய அரசர்கள் மூவரைக் குறிப்பிடுக

ii.தாவீது அரசனின் மனம் வருந்துதலின் வெளிப்பாடுகள் எவை?

iii.காணாமல் போன மகன் உவமையில் இருந்து தந்தையின் அன்பு பற்றி ஐந்து வரிகளில் எழுதுக.

(3+4+5=12)

07.

i.புனித அகுஸ்தீனின் வாழ்வை மாற்றிய விடயங்கள் இரண்டு தருக

ii.பாவத்திற்குக் கிடைக்கும் இரு வகையான தண்டனைகள் எவை?

iii. ஒப்புரவு அடையாளத்தின் வழியாக மன்னிப்புப்பெறும் படிமுறைகள் எவை?

(3+4+5=12)

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**Education கல்வி අධ්‍යාපන**

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page